# அலகுத்தேர்வு : இயல் - 3

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண் : 25**

**I. சரியான விடையைத் தேர்தெடுத்து எழுதுக.** $4 \times 1 = 4$

1. நண்பர்களுடன் ___________ விளையாடு.
   அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து
2. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________.
   அ) இல்லாதுஇயங்கும் ஆ) இல்லாஇயங்கும் இ) இல்லாதியங்கும் ஈ) இல்லதியங்கும்
3. தானே இயங்கும் எந்திரம் __________.
   அ) கணினி ஆ) தானியங்கி இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி
4. நீலம் வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________.
   அ) நீலம்வான் ஆ) நீளம்வான் இ) நீலவான் ஈ) நீலவ்வான்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** $3 \times 1 = 3$

5. நுட்பமாகச் சிந்தித்து அறிவது __________.
6. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.
7. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் __________.

**III. பாடல் வரிகளுக்கேற்றவாறு முறைப்படுத்துக.** $4 \times 1/2 = 2$

7. சிந்தனை கொள் அறிவியல்
8. சொல் தெளிந்து ஐயம்
9. கேள் ஏன் என்று
10. வெல்லும் என்றும் அறிவியலே

**IV. சொல்வளம் பெருக்குக.** $2 \times 1/2 = 1$

11. ____________ துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
12. இன்று பல்வேறு துறைகளிலும் ____________ பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

**V. கலைந்துள்ள எழுத்துக்களை முறைப்படுத்துக.** $6 \times 1/2 = 3$

13. அ) விகண்லம் ஆ) மத்ருதும்வ இ) அவிறில்ய ஈ) ணினிக உ) எலால்ம் ஊ) அப்ழைபு

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** $3 \times 2 = 6$

14. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?
15. 'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?
16. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்துகள் யாவை?
17. ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்துகள் வரிசையில் மொழிமுதல் எழுத்துகளாக அமைபவை எவை? அவ்வெழுத்துகளைக் கொண்டு தொடங்கும் சொற்களை எழுதுக.

**VII. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

18. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.
19. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?
20. எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக.

*******